# அனகாபுத்தூர் நகராட்சி

**சென்னை – 600 070.**

கூட்ட எண்.69/2020 நாள். 31.12.2020

## தனி அலுவலர் அவர்களின் டிசம்பர் 2020 மாதம் சாதாரணக் கூட்டப்பொருள்

**31.12.2020ம்** நாள் வியாழன்கிழமை மாலை **4.30** மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பெறும் சாதாரணக் கூட்டப் பொருள் .

**பொருள் எண். 1**

அனகாபுத்தூர் நகராட்சி டிசம்பர் 2020 மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு / இறப்பு / மற்றும் இறந்து பிறந்தவைகள் குறித்த விவரம்

**பிறப்பு / இறப்பு / இறந்து பிறந்தவைகள்**

| வ. எண். | மாதம் | பிறப்பு | | இறப்பு | | இறந்து பிறந்தவைகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1. | டிசம்பர் 2020 | 0 | 0 | 17 | 9 | இல்லை | இல்லை |

**பொருள் எண். 2**

ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் டிசம்பர் 2020 மாதத்தின் நாட் குறிப்புகள்

**அலுவலக குறிப்பு :** கூட்டத்தில் பதிவு செய்யலாம்.

**பொருள் எண். 3**

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.05, பாலாஜி நகர் 17வது தெருவில் சிறுபாலம் மற்றும் கால்வாய் உயர்த்தி அமைத்தல் பணி | 2.50 |
| 2. | அனகாபுத்தூர் நகராட்சியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் Water Level Indicator அமைத்தல் பணி | 1.50 |

**அலுவலகக் குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண். 4</u>**

வட்டாட்சியர் பல்லாவரம் அவர்களின் கடித ந.க.எண்.206/2020/ஆ1 நாள் 29.12.2020ல் வரப்பெற்ற கடிதத்தில் அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட அனகாபுத்தூர் கிராமம் புல எண்: 123/1 ல் மற்றும் 304 உள்ள மேய்க்கால் புறம்போக்கில் விஸ்தீரணம் 08526 சதுரமீட்டர் இடத்தை குடியிருக்கும் 116 நபர்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்குவது தொடர்பாக மேற்படி இடத்தில் ஏற்படுத்தப்பட்ட குடியிருப்பு ஆக்கிரமிப்புகளை வகைப்பாடு மாற்றம் செய்து வரன்முறை படுத்துவதற்கு நகர மன்ற அனுமதி வழங்கக் கோரி வரப்பெற்ற கடிதம் மன்ற பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

**<u>அலுவலக குறிப்பு</u>:** அனகாபுத்தூர் கிராமம் புல எண்: 123/1 ல் மற்றும் 304 உள்ள மேய்க்கால் புறம்போக்கில் விஸ்தீரணம் 08526 சதுரமீட்டர் இடத்தை குடியிருக்கும் 116 நபர்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்குவது தொடர்பாக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு அனகாபுத்தூர் நகர மன்றத்தினை பொருத்தமட்டில் அரசின் விதிகளுக்குட்பட்டு நில உபயோக மாற்றம் செய்து பட்டா வழங்க ஆட்சேபணை ஏதுமில்லை என தெரிவிக்கலாம்.

**<u>பொருள் எண். 5</u>**

அரசாணை (நிலை) எண்.126 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.3(2)) துறை நாள்.16.11.2020ன்படி அறிவிப்புகள் 2019–20 பாதாள சாக்கடை திட்டம் அனகாபுத்தூர் மற்றும் பம்மல் நகராட்சிகளில் ரூ.211.15 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்த நிர்வாக அனுமதி ஆணை கீழ்காணும் நிதி அதாரங்களின் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ளது.

**(ரூபாய் கோடியில்)**

| நகராட்சியின் பெயர் | கூவம் நிதி நீர் சீரமைப்பு திட்டத்தின் கீழ் உள்ள தொகை | டுபிட்கோ நிறுவனத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் நிதி (IUDM) | மொத்த மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| அனகாபுத்தூர் | **15.65** | **63.15** | **78.80** |
| பம்மல் | **27.82** | **104.53** | **132.35** |
| | | **மொத்தம்** | **211.15** |

அதில் அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கல்மடுவு பகுதியில் சர்வே எண்.257/பகுதி/309/1 பகுதி–ல் புதியதாக 27.00 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (Sewerage Treatment Plant) அமைக்க தடையில்லா சான்று (No Objection Certificate) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண். 6</u>**

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட குப்பை கிடங்கில் பல ஆண்டுகளாக சேகரிக்கப்பட்டு, இருந்த **27,000** க.மீட்டர் கொள்ளளவு திடக்கழிவுகளை Bio - Mining முறையில் பிரித்து எடுத்து அப்புறப்படுத்தும் பணிக்கு ரூ.**178.00** இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.**22866/2018**/பி3 நாள்.**23.08.2018**–ல் நிர்வாக அனுமதியும், இதனை தொடர்ந்து தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களின் தொழில்நுட்ப அனுமதியும் பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் வாயிலாக மெசஸ். ஹர்ஷிதா அசோசியேட்ஸ் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

அனகாபுத்தூர் நகராட்சியில் திடக்கழிவுகள் **27000** க.மீட்டர் Bio - Mining முறையில் அப்புறப்படுத்தப்பட்டது. இது தொடர்பாக கள ஆய்வு மேற்கொண்ட அண்ணா பல்கலைகழகம் பார்வையில் காணும் கடிதத்தில், ஏற்கனவே அளவீடு செய்யப்பட்டு தெரிவிக்கப்பட்ட **27,000** க.மீட்டர் அளவினை தவிர்த்து மேலும் **7,232** க.மீட்டர் புதிய கழிவுகள் **2016–2020** முதல் குப்பை கிடங்கில் தேக்கம் செய்யப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக கீழ்காணும் விவரம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

i) அண்ணா பல்கலைகழகத்தால் மேற்படி **27,000** க.மீட்டர் அளவீடு **2016**ம் ஆண்டு செய்யப்பட்டது ஆகும். இக்கழிவுகளை Bio-Mining முறையில் அப்புறப்படுத்த **2018**ம் ஆண்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு **07.12.2018** அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு தற்போது பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது.

ii) இந்நகராட்சியில் **2017**ம் ஆண்டு முதல் பசுமை உரக்குடில் (Micro Compost Centre) நடைமுறையில் உள்ளது.

iii) மேற்காண் நிலையில் அண்ணா பல்கலைகழகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ள **7,232** க.மீட்டர் கழிவுகள் பசுமை உரக்குடில் (Micro Compost Centre) இந்நகராட்சிக்கு நடைமுறைக்கு வருவதற்கு முன் தேக்கம் செய்யப்பட்ட கழிவுகள் ஆகும். அதாவது **2016–2018**ம் ஆண்டுகளில் தேக்கம் செய்யப்பட்டது ஆகும்.

iv) இக்கழிவுகள் இந்நகராட்சியின் குப்பை கிடங்கில் உள்ளது. இப்பகுதிலேயே இந்நகராட்சிக்கு தற்போது நடைமுறைப்படுத்தப்படவுள்ள பாதாள சாக்கடை திட்டத்தின் Sewarge Treatment Plant வர உள்ள நிலையில் மேற்படி **7,232** க.மீட்டர் கழிவுகளை அகற்ற வேண்டிய சூழல் உள்ளது.

v) எனவே கூடுதலாக உள்ள **7,232** க.மீட்டர் கழிவுகளை Bio-Mining முறையில் அகற்ற ஆகும் உத்தேச செலவினம் ரூ.**56.00** இலட்சத்தினை முழு மான்யமாக **15**வது மத்திய நிதி குழு மான்ய திட்டம் **2020–21**ன் கீழ் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதியினை இந்நகராட்சிக்கு வழங்க நகராட்சி

நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட தொகை ரூ.56.00 இலட்சத்தினை முழு மான்யமாக 15வது மத்திய நிதி குழு மான்ய திட்டம் 2020–21ன் கீழ் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதியினை இந்நகராட்சிக்கு வழங்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களுக்கு அனுப்ப மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.7**

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.8763/2020/ஆர்2 நாள்.25.09.2020ன் படி கொரோனா நோய் தொற்று (Covid-19) தடுப்பு பணி காரணமாக மத்திய / மாநில அரசினால் பிறப்பிக்கப்பட்ட பொது ஊரடங்கு காலத்தல் (01.04.2020 முதல் 31.05.2020) வரை உள்ள மாதத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படாத கடைகள், வரியில்லா இனங்களுக்கான வாடகை தொகையினை செலுத்துவதிலிருந்து அரசாணை எண்.298 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை நாள்.02.09.2020ன் படி விலக்க அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| Sl.No | Assessment No | Assessee Name | Property Name | April 2020 Demand | May 2020 Demand | Total Demand to be waived in Rs. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 (5+6) |
| 1. | 017/201501 | A.Thandavamoorthy | Daily Market Collection | 600 | 600 | 1200 |
| 2. | 017/201502 | A.Vijaya | Daily Market Collection | 600 | 600 | 1200 |
| 3. | 017/201503 | P.Elisabeth Rani | Daily Market Collection | 600 | 600 | 1200 |
| 4. | 017/201504 | D.Jabamalai | Daily Market Collection | 600 | 600 | 1200 |
| 5. | 017/201505 | S.Amul Rani | Daily Market Collection | 600 | 600 | 1200 |
| 6. | 017/201509 | Akbar Basha | Daily Market Collection | 600 | 600 | 1200 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7. | 017/201510 | S.Kaja Moideen | Daily Market Collection | 600 | 600 | 1200 |
| 8. | 017/201511 | S.Jafer Ali | Daily Market Collection | 600 | 600 | 1200 |
| 9. | 017/201512 | G.Shajhon | Daily Market Collection | 600 | 600 | 1200 |
| 10. | 017/201513 | Ghows Basha | Daily Market Collection | 600 | 600 | 1200 |
| 11. | 017/201514 | A.Santha Kumar | Daily Market Collection | 600 | 600 | 1200 |
| 12. | 017/201515 | A.Jhonson | Daily Market Collection | 600 | 600 | 1200 |
| 13. | 017/201516 | Thatshayani | Daily Market Collection | 600 | 600 | 1200 |
| 14. | 017/201517 | A.Azarudeen | Daily Market Collection | 600 | 600 | 1200 |
| 15. | 017/201518 | A.Atham Basha | Daily Market Collection | 600 | 600 | 1200 |
| 16. | 017/201521 | Krishnan | Daily Market Collection | 600 | 600 | 1200 |
| 17. | 017/LD02/00001 | A.Siva | Daily Open Market Toll | 34453 | 34453 | 68906 |
| | | | **Total Amount** | **44053** | **44053** | **88106** |

மேற்கண்டவாறு உள்ள கடைகள், வரியில்லா இனங்களுக்கான வாடகை தொகை ரூ.88,106/—ஐ கேட்பில் இருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**: அரசாணை எண்.298 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை நாள்.02.09.2020 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் ஒப்புதலுக்கம் வைக்கப்படுகிறது. மேலும் அரசாணையில் தெரிவித்துள்ளவாறு மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட தொகையினை கணிணி கேட்பில் இருந்து நீக்கம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.8**

அனகாபுத்தூர் நகராட்சிக்கு சொந்தமான மீன் மார்க்கெட் மற்றும் இறைச்சி கடை நடத்தப்பட்டு வருகிறது. அவை 01.01.2018 முதல் 31.12.2020 வரை குத்தகை முடிந்து விட்டபடியால்,

ஏற்கனவே உள்ள குத்தகைதாரர்கள் **1** முதல் **16** வரை உள்ள குத்தகைதாரர்கள் மீண்டும் தனக்கே வழங்க கோரி மனு செய்துள்ளனர். எனவே கீழ்க்காணும் குத்தகைதாரர்களுக்கு மீண்டும் **01.01.2021** முதல் **31.12.2023** வரை மூன்றாண்டுகளுக்கு புதுப்பித்து வழங்கவும், குத்தகைதாரர்களுக்கு குத்தகை தொகையில் வருடந்தோறும் **5** சதவிகிதம் குத்தகை தொகை உயர்வு செய்யவும், உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | கடை எண். | குத்தகைதாரர் பெயர் |
|---|---|---|
| 1 | 01 | திரு.ஏ.தாண்டவமூர்த்தி |
| 2 | 02 | திருமதி.ஏ.விஜயா |
| 3 | 03 | திருமதி.பி.எலிசபெத் ராணி |
| 4 | 04 | திருமதி.டி.ஜெபமாலை |
| 5 | 05 | திருமதி.அமுல் ராணி |
| 6 | 20 | திரு.அக்பர் பாஷா |
| 7 | 21 | திரு.எஸ்.காஜா மொய்தீன் |
| 8 | 22 | திரு.எஸ்.ஜாபர் அலி |
| 9 | 23 | திரு.ஜி.ஷாஜான் |
| 10 | 24 | திரு.கௌஸ் பாஷா |
| 11 | 25 | திரு.எ.சாந்தகுமார் |
| 12 | 26 | திரு.அ.ஜான்சன் |
| 13 | 30 | திரு.கிருஷ்ணன் |
| 14 | 46 | திருமதி.தாட்சாயனி |
| 15 | 47 | திரு.எ.அசாருதீன் |
| 16 | 48 | திரு.எ.ஆதம் பாஷா |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண்.9</u>**

அனகாபுத்தூர் நகராட்சியில் வார்டு எண். **1** முதல் **9** வரை உள்ள குடிநீர் குழாய், வீட்டு இணைப்புகள், பொது குழாய்கள் மற்றும் வால்வுகளில் ஏற்படும் பழுது நீக்கம் செய்தல் பணி ரூ.**9.90** இலட்சத்திற்கு மெசஸ். ராஜலட்சுமி காண்ட்ராக்ஸ் நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது இந்நகராட்சியில் சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலம் குடிநீர் அபிவிருத்தி பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி பணியில் பிரதான குழாய் மற்றும் பகிர்மான குழாய் பதிக்கும் பணிகள் மேற்கொள்ளும் போது ஏற்கனவே பழைய பிரதான குழாய், பகிர்மான குழாய் மற்றும் குடிநீர் இணைப்பு அதிகளவில் பழுது ஏற்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் சீரான முறையில் செய்ய இயலவில்லை. எனவே குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்கண்ட பணிகளை உடனுக்குடன் செய்து முடிக்கப்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதன் காரணமாக மேற்படி பணிக்கான மதிப்பீட்டுத்

தொகை நவம்பர் மாதத்துடன் முடிவடைந்து விட்டது. ஆனால் குடிநீர் திட்ட பணி தொடர்ந்து நடைபெருவதால் இதே ஒப்பந்தத்தில் பழுது பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு நல்ல முறையில் குடிநீர் விநியோகம் செய்ய கூடுதல் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு**</u>: மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2.** திட்ட பணியின் மூலம் பகிர்மான குழாய் அமைக்கும் போது எதிர்பாரதவிதமாக ஏற்படும் பழுதுகள் உடனுக்குடன் சரி செய்து பொது மக்களுக்கு குடிநீர் வழங்க வேண்டியுள்ளதால் குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருதி ஏற்கனவே பணி மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர் மூலம் அதே விலை விகிதத்தில் கூடுதல் தொகை ரூ.**5.00** இலட்சத்தில் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதியளிக்கலாம்.

<u>**பொருள் எண்.10**</u>

அனகாபுத்தூர் நகராட்சியில் வார்டு எண். **10** முதல் **18** வரை உள்ள குடிநீர் குழாய், வீட்டு இணைப்புகள், பொது குழாய்கள் மற்றும் வால்வுகளில் ஏற்படும் பழுது நீக்கம் செய்தல் பணி ரூ.**9.90** இலட்சத்திற்கு மெசஸ். ராஜலட்சுமி காண்ட்ராக்ஸ் நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது இந்நகராட்சியில் சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலம் குடிநீர் அபிவிருத்தி பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி பணியில் பிரதான குழாய் மற்றும் பகிர்மான குழாய் பதிக்கும் பணிகள் மேற்கொள்ளும் போது ஏற்கனவே பழைய பிரதான குழாய், பகிர்மான குழாய் மற்றும் குடிநீர் இணைப்பு அதிகளவில் பழுது ஏற்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் சீரான முறையில் செய்ய இயலவில்லை. எனவே குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்கண்ட பணிகளை உடனுக்குடன் செய்து முடிக்கப்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதன் காரணமாக மேற்படி பணிக்கான மதிப்பீட்டுத் தொகை நவம்பர் மாதத்துடன் முடிவடைந்து விட்டது. ஆனால் குடிநீர் திட்ட பணி தொடர்ந்து நடைபெருவதால் இதே ஒப்பந்தத்தில் பழுது பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு நல்ல முறையில் குடிநீர் விநியோகம் செய்ய கூடுதல் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு**</u>: மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2.** திட்ட பணியின் மூலம் பகிர்மான குழாய் அமைக்கும் போது எதிர்பாரதவிதமாக ஏற்படும் பழுதுகள் உடனுக்குடன் சரி செய்து பொது மக்களுக்கு குடிநீர் வழங்க வேண்டியுள்ளதால் குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருதி ஏற்கனவே பணி மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர் மூலம் அதே விலை விகிதத்தில் கூடுதல் தொகை ரூ.**5.00** இலட்சத்தில் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதியளிக்கலாம்.

**<u>பொருள் எண்.11</u>**

அனகாபுத்தூர் நகராட்சியில் வடகிழக்கு பருவமழை மற்றும் புயல் பாதிப்பினால் வார்டு எண்.1 முதல் 9 வரையுள்ள சாலைகள் சேதமடைந்து ஆங்காங்கே சிறு சிறு பள்ளங்கள் ஏற்பட்டுள்ளதால் பொது மக்கள் போக்குவரத்திற்கு பெரிதும் பாதிப்புள்ளாகின்றனர். எனவே, சாலைகளில் ஏற்பட்டுள்ள பள்ளங்களுக்கு Patch Works, GSB மற்றும் WMM கொண்டு சரி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண்.12</u>**

அனகாபுத்தூர் நகராட்சியில் வடகிழக்கு பருவமழை மற்றும் புயல் பாதிப்பினால் வார்டு எண்.10 முதல் 18 வரையுள்ள சாலைகள் சேதமடைந்து ஆங்காங்கே சிறு சிறு பள்ளங்கள் ஏற்பட்டுள்ளதால் பொது மக்கள் போக்குவரத்திற்கு பெரிதும் பாதிப்புள்ளாகின்றனர். எனவே, சாலைகளில் ஏற்பட்டுள்ள பள்ளங்களுக்கு Patch Works, GSB மற்றும் WMM கொண்டு சரி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண்.13</u>**

29.12.2020ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.1 முதல் 9 வரையுள்ள சேதமடைந்த சாலைகளை GSB & WMM கொண்டு செப்பணிடுதல் பணி | 5.00 | எம்.ஆஷா<br>எம்.நித்தியானந்தம் | 0.10 % குறைவு<br>1.20 % அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | வார்டு எண்.10 முதல் 18 வரையுள்ள சேதமடைந்த சாலைகளை GSB & WMM கொண்டு செப்பணிடுதல் பணி | 5.00 | எம்.ஆஷா<br>எம்.நித்தியானந்தம் | 0.10 % குறைவு<br>1.20 % அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**: வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண்.14**

31.12.2020ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | அனகாபுத்தூர் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் பணி (வார்டு எண்.1 முதல் 9 வரை) | 9.80 | எம்.ஆஷா<br>ஒரு கிலோ லிட்டர்<br>ரூ.170/–<br>ஏ.சுசீலா<br>ஒரு கிலோ லிட்டர்<br>ரூ.190/– | குறைவு<br>அதிகம் |
| 2. | அனகாபுத்தூர் நகராட்சி காமராஜபுரத்தில் உள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் பணி (வார்டு எண்.10 முதல் 18 வரை) | 9.80 | ஜி.சுரேஷ்<br>ஒரு கிலோ லிட்டர்<br>ரூ.170/–<br>எம்.நித்தியானந்தம்<br>ஒரு கிலோ லிட்டர்<br>ரூ.190/– | குறைவு<br>அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**: வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண்.15**

09.12.2020ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | செங்கழுநீர்மலை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 1 MLD Plant சுத்திகரிப்பு நிலையத்தின் பராமரிப்பு பணிக்கு தேவையான பொருட்கள் சப்ளை செய்தல் | 9.80 | மெசஸ். யாஹா வாட்டர் சிஸ்டம்<br>மெசஸ். ஆனந்த் அசோப் புத்ராஜா | 0.05 % குறைவு<br>1.10 % அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பணி | | | |
| 2. | செங்கழுநீர்மலை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 1 MLD Plant சுத்திகரிப்பு நிலையத்தின் பராமரிப்பு பணிக்கு தேவையான பணியாளர்களை சப்ளை செய்தல் பணி | 9.80 | மெசஸ். யாஹா வாட்டர் சிஸ்டம்<br>மெசஸ். ஆனந்த் அசோப் புத்ராஜா | 0.10 % குறைவு<br>1.20 % அதிகம் |

<u>**அலுவலகக் குறிப்பு**</u>: வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>**பொருள் எண்.16**</u>

10.12.2020ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | நகராட்சி குடிநீர் வாகனம் டிஎன் 22 ஏஎல் 5349 பழுது பார்த்து பணி மேற்கொண்டு தகுதி சான்று பெறுதல் பணி | 3.00 | மெசஸ். ராதாகிருஷ்ணன் ஆட்டோ ஒர்க்ஸ்<br>மெசஸ். மகாசக்தி பாடி ஒர்க்ஸ் | 0.10 % குறைவு<br>1.20 % அதிகம் |
| 2. | நகராட்சி குடிநீர் வாகனம் டிஎன் 22 ஏபி 4255 பழுது பார்த்து பணி மேற்கொண்டு தகுதி சான்று பெறுதல் பணி | 3.00 | மெசஸ். ராதாகிருஷ்ணன் ஆட்டோ ஒர்க்ஸ்<br>மெசஸ். மகாசக்தி பாடி ஒர்க்ஸ் | 0.10 % குறைவு<br>1.20 % அதிகம் |
| 3. | குடிநீர் விநியோக பணிக்கு தேவையான Hypo Liquid குளோரின் சப்ளை செய்தல் பணி | 9.80 | மெசஸ். ராம் அசோசியேட்ஸ்<br>பி.வித்யா | 0.32 % குறைவு<br>1.91 % அதிகம் |
| 4. | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள 45 எண்ணிக்கையிலான உயர் கோபுர விளக்கினை ஒரு வருட காலத்திற்கு பழுது பார்த்து பராமரித்தல் பணி | 9.80 | லட்சுமி எண்டர்பிரைசஸ்<br>மகாலஷ்மி எண்டர்பிரைசஸ் | 0.10 % குறைவு<br>1.50 % அதிகம் |

<u>**அலுவலகக் குறிப்பு**</u>: வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

<u>பொருள் எண்.17</u>

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பூங்காக்களில் கீழ்கண்ட வளர்ச்சி பணிகள் சென்னை பெருநகர் வளர்ச்சி குழும நிதியில் மேற்கொள்ள மன்றத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.02, கெளரி அவென்யூ பூங்காவில் விளையாட்டு பொருட்கள் அமைத்தல் பணி | 9.20 |
| 2. | வார்டு எண்.02, கெளரி அவென்யூ பூங்காவில் சுற்றுச் சுவர் அமைத்தல் பணி | 9.80 |
| 3. | வார்டு எண்.02, கெளரி அவென்யூ பூங்காவில் மின் விளக்குகள் அமைத்தல் பணி | 4.20 |
| 4. | வார்டு எண்.05, பாலாஜி நகர் பூங்காவில் விளையாட்டு பொருட்கள் அமைத்தல் பணி | 10.00 |
| 5. | வார்டு எண்.05, பாலாஜி நகர் பூங்காவில் சுற்றுச் சுவர் அமைத்தல் பணி | 9.50 |
| 6. | வார்டு எண்.05, பாலாஜி நகர் பூங்காவில் மின் விளக்குகள் அமைத்தல் பணி | 9.50 |
| 7. | வார்டு எண்.06, கலைவாணர் தெருவில் உள்ள பூங்காவினை மேம்படுத்துதல் பணி | 5.00 |
| 8. | வார்டு எண்.08, மூர்த்தி நகர் பூங்காவில் மின் விளக்குகள் அமைத்தல் பணி | 6.50 |
| 9. | வார்டு எண்.16, சீனிவாசபுரம் பூங்காவில் சுற்றுச் சுவர் அமைத்தல் பணி | 9.80 |
| 10. | வார்டு எண்.16, சீனிவாசபுரம் விரிவு பூங்காவில் மின் விளக்குகள் அமைத்தல் பணி | 9.50 |
| 11. | வார்டு எண்.16, சீனிவாசபுரம் பூங்காவில் மின் விளக்குகள் அமைத்தல் பணி | 8.50 |
| 12. | வார்டு எண்.16, சீனிவாசபுரம் விரிவு பூங்காவில் விளையாட்டு பொருட்கள் அமைத்தல் பணி | 10.00 |
| 13. | வார்டு எண்.16, சீனிவாசபுரம் பூங்காவில் விளையாட்டு பொருட்கள் அமைத்தல் பணி | 9.20 |
| 14. | வார்டு எண்.16, சீனிவாசபுரம் பூங்காவினை மேம்படுத்துதல் பணி | 9.90 |
| 15. | வார்டு எண்.16, தென்றல் நகர் பூங்காவில் விளையாட்டு பொருட்கள் அமைத்தல் பணி | 9.20 |
| 16. | வார்டு எண்.16, தென்றல் நகர் பூங்காவில் நடைபாதை, மின்சார பணிகள் (ம) வண்ணம் பூசுதல் பணி | 9.00 |
| 17. | வார்டு எண்.17, லஷ்மி நகர் பூங்காவில் நடைபாதை, மின்சார பணிகள் (ம) வண்ணம் பூசுதல் பணி | 9.20 |
| 18. | வார்டு எண்.17, லஷ்மி நகர் பூங்காவில் சிறுவர் விளையாட்டு பொருட்கள் அமைத்தல் பணி | 8.80 |
| 19. | வார்டு எண்.17, லஷ்மி நகர் பூங்காவில் மின் விளக்குகள் அமைத்தல் பணி | 9.20 |
| | **மொத்தம்** | **166.00** |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை சென்னை பெருநகர் வளர்ச்சி குழும நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.18**

அரசாணை (நிலை) எண்.105 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (கொடு,தடு 2) நாள் 19.10.2020ம் தேதியின்படி, ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் இனத்தவர்களின் ஈமச்சடங்கிற்கு வழங்கப்படும் தொகையை ரூ.2500/ லிருந்து ரூ5000/ ஆக உயர்த்தியும் வெளியிடப்பபட்ட அரசாணையை மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**: மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.19**

அனகாபுத்தூர் நகராட்சி 2020-2021ம் ஆண்டுக்கு பொது சுகாதார பிரிவில் உள்ள துப்புரவு பணியாளர் ஓட்டுநர்கள் துப்புரவு மேற்பார்வையாளர், பொறியியல் பிரிவில் உள்ள ஈப்பு ஓட்டுநர்,வால்வு இயக்குபவர்,பொருத்துனர்,மற்றும் மின்பணி உதவியாளர் பொது பிரிவில் உள்ள அலுவலக உதவியாளர் பணிபுரியும் பணியாளர்களுக்கு சீருடைகள் வாங்கி வழங்கவும் அதற்கான அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள தையல் கூலி வழங்குதல் உட்பட தோராய செலவினம் ரூ.50000/-க்கு நகரமன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.20**

அனகாபுத்தூர் நகராட்சி 2020-2021ம் பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் 18 துப்புரவு பணியாளர்கள் மற்றும் 1 ஒட்டுநர்களுக்கு காலனிகள் வாங்கி வழங்க வேண்டியுள்ளதால், காதி கிராப்ட் நிறுவனத்திடமிருந்து வாங்கவும் அதற்கான தோராய செலவினம் ரூ.20000/-க்கு நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.21**

அனகாபுத்தூர் நகராட்சி 2020-2021ம் பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் 18 துப்புரவு பணியாளர்களுக்கு சோப்பு வாங்கி வழங்க வேண்டியுள்ளதால், மாதம் 1 சோப்பு வீதம் 12 மாதத்திற்க்கு 240 சோப்பு காதி கிராப்ட் நிறுவனத்திடமிருந்து வாங்கவும் அதற்கான தோராய செலவினம் ரூ.10000/-க்கு நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண்.22</u>**

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.01, 03, 07 (ம) 09 ஆகிய பகுதிகளில் பழுதடைந்த குடிநீர் குழாய்களை மாற்றி புதியதாக குடிநீர் குழாய் (பைப்லைன்) அமைத்தல் பணி | 3.90 |
| 2. | அனகாபுத்தூர் நகராட்சிக்கு குளோரினேசன் மாத்திரைகள் சப்ளை செய்தல் பணி | 3.00 |
| 3. | அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்த Tube Light–களை மாற்றி புதியதாக Tube Light பொருத்துதல் பணி | 3.00 |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண்.23</u>**

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பம்மல் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பம்மல் நகராட்சிக்கு சொந்தமான கல்குவாரியிலிருந்து அனகாபுத்தூர் நகராட்சி கல்குவாரிக்கு குடிநீர் விநியோகம் செய்ய குடிநீர் குழாய் (பைப்லைன்) அமைத்தல் பணி | 5.80 |
| 2. | வார்டு எண்.05, 06 (ம) 16 ஆகிய பகுதிகளில் பழுதடைந்த குடிநீர் குழாய்களை மாற்றி புதியதாக குடிநீர் குழாய் (பைப்லைன்) அமைத்தல் பணி | 5.00 |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண்.24</u>**

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

| **வ.எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1. | பம்மல் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பம்மல் நகராட்சிக்கு சொந்தமான கல்குவாரியிலிருந்து அனகாபுத்தூர் நகராட்சி கல்குவாரிக்கு குடிநீர் விநியோகம் செய்ய குடிநீர் குழாய் (பைப்லைன்) அமைத்தல் பணி | 5.80 |
| 2. | வார்டு எண்.05, 06 (ம) 16 ஆகிய பகுதிகளில் பழுதடைந்த குடிநீர் குழாய்களை மாற்றி புதியதாக குடிநீர் குழாய் (பைப்லைன்) அமைத்தல் பணி | 5.00 |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண்.25</u>**

இந்நகராட்சி 2019–2020ம் ஆண்டு கணக்குகள் தணிக்கை செய்யும் பணி 18.05.2020ல் உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையால் துவங்கப்பட்டதின்பேரில் தணிக்கை ஆண்டுக்கான வருவாய் மற்றும் செலவு கணக்கு தயாரித்தல் 31.03.2020 நிலையில் ஐந்தொகை குறிப்புகள் தயாரித்தல், நகராட்சியின் நிரந்தர சொத்துக்ளுக்கு மதிப்பீடு செய்தல், நகராட்சி கணக்கு நடைமுறை நூலில் விவரிக்கப்பட்ட துவக்க ஐந்தொகை குறிப்பு தயாரிக்க அனைத்து அட்டவணைகள் தயாரித்தல், பொதுபேரேடு தயாரித்தல் ஆகிய பணிகள் தனியார் கலந்தாய்வு மூலம் மேற்கொள்ள விலைப்புள்ளி கோரியதில் கீழ்ண்டவாறு வரபெற்ற விலைப்புள்ளிகளை கூட்டத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண். | நிறுவனத்தின்பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | ஜி. சாப்ட் சிஸ்டம்ஸ்<br>2/1, ஜோதி நகர் பிரதான சாலை<br>ஈக்காட்டு தாங்கல் சென்னை –32 | ரூ.150000.00 |
| 2 | கர்சர் சொலுசன்ஸ்<br>30/4, எல்லியம்மன் கோவில் தெரு<br>அடையாறு சென்னை –30 | ரூ.151500.00 |
| 3 | ஜே.பி. சாப்ட் சிஸ்டம்ஸ்<br>28, கிழக்கு ஜோன்ஸ் சாலை<br>சைதாபேட்டை சென்னை –15 | ரூ.151900.00 |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**: 1. மேற்படி வரப்பெற்ற குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**2. 2019–2020**ம் ஆண்டு கணக்குகள் முடித்து அறிக்கை தயார் செய்ய வேண்டியுள்ளதால் மேற்படி நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று, பணி மேற்கொள்ளவும் அதற்கான தொகை ரூ.**150000/–** வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.26**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படி, அனகாபுத்தூர் நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் **2019–20** மற்றும் **2020–21**ம் ஆண்டுகளுக்கான சேமநல நிதி வட்டித் தொகை கணக்கீடு செய்யவும் மற்றும் தனி நபர் வட்டி கணக்கீடு செய்து தருவதற்கு போதிய பணியாட்கள் இல்லாத காரணத்தால், தனியார் மூலம் சேமநல நிதி கணக்கீடு செய்தல், அனைத்து அட்டவணைகள் தயாரித்தல், கணக்குகளை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, காஞ்சிபுரம் அவர்களுக்கும், இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, சென்னை அவர்களுக் பிரேரனை அனுப்புவதற்கு ஏதுவாக தயார் செய்ய குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.**2.00** இலட்சத்திற்கும், மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள நகர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**: மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண். 27**

அனகாபுத்தூர் நகராட்சி பகுதியில் தொழில் புரிபவர்களுக்கான தொழில் உரிம கட்டணம் தமிழ்நாடு அரசு கோயம்புத்தூர் மாவட்ட அரசிதழ் பதிவு எண்.**344** மார்ச் **2013**ன்படி நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்படுகிறது. மேற்படி கட்டணத்தை திருத்தி அமைத்து தீர்மான எண்.**248** ாநள் **30.11.2017**ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு **2018 2019**ம் நிதியாண்டு முதல் வசூலிக்க மேல்நடவடிக்கை எடுக்க மன்ற அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் திடக்கழிவு மேலாண்மை விதிகள் **2016**ன்படி **2018 2019**ல் அனைத்து வணிக நிறுவனங்களும் சேவைக்கட்டணம் நிர்ணயம் செய்ய அறிவுறுத்தப்பட்டதால் தீர்மான எண்.**385** நாள் **10.8.2018**ன்படி மன்ற அனுமதி பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. எனவே தீர்மான எண்.**248** நாள் **30.11.2017**ல் அனுமதிக்கப்பட்ட கட்டண உயர்வினை தற்காலிகமாக நிறுத்தி வைத்திட மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

தனி அலுவலர்
அனகாபுத்தூர் நகராட்சி